# வட இலங்கை பொறியியல் வரலாற்று ஆவணமாக்கம்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

.இன்றைய காலகட்டத்தில் பொறியியல் துறை என்பது பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் பாரியதொரு தாக்கத்தினை செலுத்தும் துறையாக காணப்படுகிறது. அந்த வகையில் முதன்முறையாக அரசத் தொழில்நுட்பக் கல்லூரி என்ற பெயரில் 1893 ஆம் ஆண்டில் கொழும்பில் மருதானை 1906 இல் இக்கல்லூரி இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி என்று பெயர் மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் ஆரம்பத்தில் வேதியியல், இயற்பியல், உயிரியல் போன்ற தூய அறிவியல் கல்வியும், குடிசார் பொறியியல், மின்பொறியியல், எந்திரப் பொறியியல் போன்றவற்றில் தொழில்நுட்பக் கல்வியும் போதிக்கப்பட்டன.

1921 இல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்பட்ட போது, தொழில்நுட்பக் கல்லூரியின் அறிவியல் பகுதி பல்கலைக்கழகக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இப்பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இணைசார் கல்லூரியாக இருந்தது. 1933 ஆம் ஆண்டில் இருந்து லண்டன் பல்கலைக்கழகத்தின் பொறியியல்

துறைக்கான வெளிசார் மாணவர்களை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி பயிற்றுவித்தது. 1950 இல் பொறியியல் கல்வித் துறை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்துடன் இணைக்கப்பட்டது. 1950 களில் காலி, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. 1960களில் மேலும் பல தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றை அடிப்படையாக கொண்டு வட இலங்கையில் எவ்வாறு பொறியியல் துறை தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்தது, அதனை கற்று அத்துறையில் தேர்ச்சி பெற்ற ஆளுமைகள், மற்றும் பொறியியல் துறையில் புரிந்த சாதனைகள் என்பவ ஆவணப்படுத்தப்பட வேண்டியவையாகும்.

## செயற்றிட்ட நோக்கம்

வடஇலங்கையில் பொறியியல் துறை எவ்வாறு தோற்றம் பெற்றது, காலப்போக்கில் அதனது வளர்ச்சி எவ்வாறு அமைந்தது, இத்துறையில் சாதனை படைத்த ஆளுமைகள் , இத்துறையினால் வரலாற்றில் ஏற்பட்ட பொருளாதார , சமூக மாற்றங்கள் எவ்வாறானவை என்பவற்றை ஆவணப்படுத்தி உலகில் உள்ள அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் வட இலங்கையில் பொறியியல் துறையின் வரலாறு, இதன் வழியாக ஏற்பட்ட சமூக, பொருளாதார வரலாறு , இத்துறையில் ஆற்றப்பட்ட சாதனைகள் , அவர்களின் வாய்மொழி வரலாறு, என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு

**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**